[1990 ஏப்ரல் 10

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளில் பயணம் செய்கின்றபோது பயணிகளுக்கு ஒலிநாடா மூலம் பாடல்கள் போடப்படுகின்றன. அத்தகைய பாடல்கள் பால் உணர்வுகளைத் தூண்டும் அளவுக்கு ஆபாசப் பாடல்களாக இருக்கின்றன. இதை அரசு அறியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்பற்ற வினா.

புதிய வழித் தடங்கள் ஏற்படுத்துதல்.

*3774—திரு. எம். முகமது சித்திக் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம், பூம்புகார் சென்னை (வழி-பொறையார், மங்கைநல்லூர், மயிலாடுதுறை, பாண்டி); பூம்புகார்-திருச்சி (வழி—பொறையார், மங்கைநல்லூர், மாயிலாடுதுறை); தரங்கம்பாடி-சென்னை (வழி-பொறையார், மங்கைநல்லூர், மயிலாடுதுறை) புதிய வழித்தங்டகள் ஏற்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக மயிலாடுதுறை, நாகப்பட்டிணம் போன்ற இடங்களுக்குப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனது தொகுதியிலுள்ள பயணிகள், சென்னை, மதுரை போன்ற தொலைவு தூரம் செல்லும் பயணிகள், மயிலாடுதுறையில் இறங்கி அங்கிருந்து மாட்டு வண்டி அல்லது வாடகைக் கார் மூலம், ஊருக்குச் செல்லும் நிலைமை இருக்கிறது. இதனால் பணிகள் மிகவும் கஷ்டம் அடைகிறார்கள். அதுமட்டுமல்லாமல், எனது தொகுதியிலே ஏராளமான அயல்நாட்டுப் பயணிகள் வரும்போது, லக்கேஜூடன் மயிலாடுதுறையில் இறங்கும்போது, வீட்டுக்குச் செல்லக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தினை மயிலாடுதுறையிலிருந்து செம்பனார்கோயில், சங்கரம்பந்தல், பொறையார் வழியாக நாகப்பட்டிணம் செல்ல மாற்று ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு வெளிநாடுகளிலிருந்து விமானப் பயணிகள்.....(மணியடிக்கப்பெற்றது).

1990 ஏப்ரல் 10]

9-30 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் வினாவிற்கு விடை, மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த வழித் தடத்தில் பயணம் செய்கின்ற பயணிகளுடைய விகிதாச்சாரம் குறைவாக இருக்கிற தென்று கணிக்கப்பட்டதன் காரணமாக அந்தப் பேருந்துகள் விடுவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மீண்டும் அது சர்வே செய்யப்பட்டு, தேவைப்படின் பேருந்து களை விடலாம்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக விடப்படும் விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்ய திரிசூலம் விமான நிலையத்தில் ஒரு ரிசர்வேஷன் கவுண்டர் அமைத்து, விமான நிலையத்திலிருந்து இறங்கிச் செல்கின்ற லட்சக் கணக்கான பயணிகள் அங்கேயிருந்து அவரவர்கள் இல்லங் களுக்குச் செல்ல வசதி செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூல வினாவிற்குத் தொடர்பற்றது.

குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள்.

*2640ஏ—திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சுற்றுலாத் துறையினரால் சுற்றுலாப் பயணிகளுக்கு குற்றாலத்தில் என்னென்ன வசதிகள் மேற்கொள்ளப்படவிருக் கின்றன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 7.97 இலட்சம் செலவில் சுற்றுலாத் துறையின் மானியத்தால் கட்டப்பட்டு, நகரியத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் 'அருவி இல்லத்தை' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துக்கொண்டு, அதனை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, ''மல்லிகை இல்லத்தையும்'' தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் எடுத்துக் கொள்ளும் கருத்துருவும் பரிசீலனையில் உள்ளது. மேலும், கூடுதலாக ஒரு சுற்றுலா விடுதியும் இங்கு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.